**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, TIRUPATTUR**

| | |
|---|---|
| OS.No. | 112/2022 |
| Deposition of Witness for | DW-1 |
| Time | 3.45 PM to 5.35 PM |

| | | | |
|---|---|---|---|
| 1 | NAME | : | ஜெயராமன் |
| 2 | FATHER NAME | : | ரங்கநாதன் |
| 3 | VILLAGE | : | பாரதி நகர், இலட்சுமிபுரம் |
| 4 | TALUK | : | சென்னை |
| 5 | AGE | : | 72 |
| 6 | OCCUPATION | : | |

Solemnly affirmed in accordance with be provisions of Act of 1873 on the day of 22.07.2026

***முதல் விசாரணை***

நான் இந்த வழக்கில் முதல் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக்கேட்டுக்கொள்கிறேன்.

1. 25.09.1957 தேதியிட்ட குடிய கவுண்டர் பெயரில் உள்ள பட்டா அசல் வா.சா.ஆ–1 (ஆவணம் கிழிந்த நிலையில் உள்ளதால் அதன் நகல் எடுத்து எதிர்தரப்பினருக்கும் ஒரு நகல் கொடுக்கப்பட்டு ஒரு நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)
2. 08.07.1970 தேதியிட்ட ஞானவேல் பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆதாராக் கடன் பத்திரம் ஆவண எண்.2265/1970 அசல் வா.சா.ஆ–2
3. 21.07.1967 தேதியிட்ட திருப்பத்தூர் வட்டம் கூட்டுறவு நில அடமான வரையறுக்கப்பட்ட வங்கிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட அடமானக் கடன் பத்திரம் ஆவண எண்.3419/1967 ன் பதிவு நகல் வா.சா.ஆ–3
4. 03.09.1984 தேதியிட்ட திருப்பத்தூர் வட்டம் கூட்டுறவு நிலவள வங்கிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட அடமானக் கடன் பத்திரம் ஆவண எண்.3675/1984 ன் பதிவு நகல் வா.சா.ஆ–4
5. 17.04.2023 தேதியிட்ட திருப்பத்தூர் மாவட்ட பதிவாளர் உத்திரவு அசல் வா.சா.ஆ–5
6. 13.10.2021 தேதியிட்ட திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவு நகல் வா.சா.ஆ–6

7. கிஸ்து ரசீதுகள்(எண்ணிக்கை –12) (ஆவணம் கிழிந்த நிலையில் உள்ளதால் அதன் நகல் எடுத்து எதிர்தரப்பினருக்கும் ஒரு நகல் கொடுக்கப்பட்டு ஒரு நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) வா.சா.ஆ–7

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பு)**

**1.** வாதி ஜெயந்தி என்னுடைய தம்பி மகள். என்னுடைய தாத்தாவின் பெயர் குடியண்ணன். என்னுடைய தாத்தாவிற்கு எவ்வளவு சொத்து பாத்தியப்பட்டிருந்தது என்று கேட்டால் அனைத்து சொத்துமே அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். புல என் 231 /1 சொத்து என்னுடைய தாத்தாவிற்கு பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி சொத்தின் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 72 சென்ட் ஆகும். என்னுடைய தாத்தாவின் பெயரில் பட்டா வழங்கப்பட்டிருந்ததா என்று கேட்டால் கொடுத்திருந்தார்கள். என்னுடைய தாத்தாவிற்கு பட்டாபடி பாத்தியப்பட்ட சொத்தா என்று கேட்டால் ஆமாம். என்னுடைய தாத்தாவின் பெயரில் இருந்த பட்டா எண் எனக்கு தெரியாது. தற்பொழுது பூமியில் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 62 சென்ட் மட்டும் தான் உள்ளது என்று சொன்னால் என்னுடைய தந்தை 10 சென்ட் இடம் வாங்கினார். ஆக அந்த 10 சென்டையும் சேர்த்து மொத்தம் 3 ஏக்கர் 72 சென்ட் இடம் உள்ளது.

**2.** குடியண்ணனுடன் பிறந்தவர்கள் மொத்தம் மூன்று நபர்கள். அவருடைய பெயர் குடியண்ணன் பெரியவர், இரண்டாவது லிங்கண்ணன், மூன்றாவதாக கபீரண்ணன். லிங்கண்ணனை கொட்டப்பல்லன் என்றும் அழைப்பார்கள். கபீரண்ணனை புடுக்கன் அல்லமு புடுக்கப்பன் என்றும் அழைப்பார்கள். குடியண்ணன் மற்றும் அவர்களுடன் பிறந்தவர்களுக்கிடையில் பாகப்பிரிவினை செய்யப்பட்டு தனித்தனியாக சொத்துக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி எனது தாத்தாவுடன் பிறந்தவர்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்டு அவர்களுடைய பாகத்துக்கு தகுந்தவாறு தனித்தனி பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். இப்படி குடியண்ணன் மற்றும் அவருடன் பிறந்த சகோதரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்துக்களானது பிதுராஜ்ய சொத்து என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட குடியண்ணன் மற்றும் அவருடைய சகோதரர்களுக்கு இடையில் மாட பள்ளியில் உள்ள வீடு பாகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

**3.** குடியண்ணனுக்கு என்னுடைய தந்தை ஒரே மகன் ஆவார். குடியண்ணன் எப்பொழுது இறந்தார் என்று எனக்கு ஞாபகத்தில் இல்லை. அவர் எப்பொழுது இறந்தார் என்று எனக்கு தெரியும். அவர் இறக்கும் பொழுது எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை. மேற்படி

குடியண்ணனுக்கு புல எண்.231/1–இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்தை தவிர வேறு எந்த சொத்துமே பாத்தியப்பட்டதில்லை. மேற்படி புல எண்ணில் உள்ள சொத்தைத் தவிர வேறு எந்த சொத்தும் குடியண்ணனின் மகனான என்னுடைய தந்தை ரங்கநாதனுக்கும் தாதவள்ளியில் பாத்தியப்பட்ட சொத்து இல்லை. மேற்படி சொத்தை தவிர எனக்கும் வேறு எந்த சொத்தும் தாதவள்ளியில் இல்லை. தாதவள்ளி கிராமத்தில் நான் எந்த சொத்தையும் தனிப்பட்ட முறையில் வாங்கவில்லை.

4. என்னுடைய தந்தைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 3 ஏக்கர் 62 சென்ட் தவிர அவருடைய சகோதரர்களிடமிருந்து வாங்கியதாக சொல்லப்படும் 10 சென்ட் இடத்திற்குரிய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. என்னுடைய தந்தை அப்பய நாயுடு என்பவரிடமிருந்து 10 சென்ட் இடத்தை வாங்கினார். 27.11.1962 இல் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். மேற்படி விற்பனை பத்திரம் வாதி தரப்பில் வா.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. என்னுடைய சித்தப்பாவிடம் இருந்து வீட்டுமனையை என் தந்தை வாங்கினாரா என்று கேட்டால் என் தந்தைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பாகத்தை விற்றுவிட்டு அதிலிருந்து வந்த பணத்தில் என் சித்தப்பாவிடம் இருந்து இடத்தை வாங்கினார்.

5. என்னுடைய தந்தை 1957–ம் தேதியிட்ட பத்திரத்தின்படி அந்த இடத்தை வாங்கினார் என்றால் சரிதான். புல எண் 231/1 எத்தனை உட்பிரிவாக தற்போது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் மூன்று உட்பிரிவுகள் செய்துள்ளார்கள். ஆனால் அந்த உட்பிரிவு எண் எனக்கு தெரியாது. புல எண் 231/1 இல் கிணறு உள்ளதா என்று கேட்டால் இரண்டு கிணறு உள்ளது. கிணறு கூட்டு பட்டாவில் உள்ளதா என்று கேட்டால் ஒரு கிணறு கூட்டு பட்டாவில் உள்ளது, மற்றொரு கிணறு கூட்டு பட்டாவில் இல்லை. புல எண் 231/1 பி கூடிய பட்டா எண் 987 என்றும் அது என்னுடைய பெயரிலும், என்னுடைய தம்பியின் பெயரிலும் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அந்த பட்டாதான் கூட்டு பாகத்தில் உள்ள கிணறுக்காக வழங்கப்பட்ட பட்டாவாகும்.

6. மேற்படி சொத்தானது 3 ஏக்கர் 62 சென்ட்டுக்குள் அடங்கும் என்றால் சரிதான். 3 ஏக்கர் 62 சென்டானது பிரிக்கப்பட்டு தான் 231/1பி என்று பட்டா வழுங்கப்பட்டுள்ளது என்றும் அந்த பட்டா தான் எங்களுடைய பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பட்டா என்னுடைய பெயரிலும் என்னுடைய தம்பி ராஜேந்திரன் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள், இரண்டு சகோதரிகள் அதில் ஒரு சகோதரர் 30 வருடத்திற்க்கு முன்பு இறந்து விட்டார். 987 பட்டா 1984 ஆம் வருடம் வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதேபோல் 740 என்ற பட்டா எண் ராஜேந்திரன் பெயரில் நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (UDR) பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த சொத்துக்கள் அனைத்துமே மூதாதையர் சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான்.

7. 21.07.1967–ம் தேதி திருப்பத்தூர் கூட்டுறவு நில அடமான நிறுவன வங்கியில் நாங்கள் அடமான கடன் வைத்ததாக சொல்லியிருக்கின்றேன் என்றால் சரிதான். மேற்படி அடமான கடன் பத்திரமானது 3 ஏக்கர் 62 சென்ட் மற்றும் என்னுடைய தந்தையால் வாங்கப்பட்ட 10 சென்ட் சொத்துக்களும் சேர்த்து தான் அடமானம் வைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். என்னுடைய தந்தை விவசாய வேலை தான் செய்து வந்தார். மேற்படி 3 ஏக்கர் 62 சென்ட் இடத்திலிருந்து வந்த வருமானத்தைக் கொண்டுதான் என்னுடைய தந்தையால் 10 சென்ட் இடம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி 1967 ஆம் வருடம் வைக்கப்பட்ட அடமானமானது பைசல் செய்யப்பட்டு விட்டது. பைசல் செய்யப்பட்டதற்கான ரசீதினை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

8. அதன் பிறகு என் தந்தை ஞானவேல் என்பவருக்கு ஒரு அடமான கடன் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி கடன் பத்திரமும் 3 ஏக்கர் 62 சென்ட் மற்றும் என் தந்தையால் வாங்கப்பட்ட 10 சென்ட் இடம் சேர்த்து தான் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இப்படி அடமான கடன் பத்திரம் எழுதப்பட்ட காலகட்டத்தில் எத்திராஜ் என்னுடைய சகோதரர் உயிருடன் தான் இருந்தார் அந்த சமயத்தில் நாங்கள் இளவர். அதனால் என்னுடைய தந்தை தனக்காகவும் இளவரான எங்களையும் சேர்த்து அந்த அடமான கடன் பத்திரத்தை எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் மீண்டும் 1984 ஆம் வருடம் கூட்டுறவு நில அடமான நிறுவன வங்கியில் அடமான வைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

9. குப்புலிங்கம் என்பது என்னுடைய மகன் என்னுடைய தந்தை என்னுடைய மகன் சசிகுமாரை கூப்பிலிங்கம் என்று அழைப்பார். என்னுடைய தம்பி ராஜேந்திரனுக்கு தமிழ்ச்செல்வன் என்ற ஒரு மகன் இருந்தார் அவர் தற்பொழுது உயிருடன் இல்லை. கடன் பத்திரம் எழுதும் போது என்னுடைய மகன் மற்றும் ராஜேந்திரன் மகன் தமிழ்ச்செல்வன் இருவரும் இளவராக இருந்தார்கள். அவர்களுக்கு அவர்களுடன் சேர்ந்து தான் என்னுடைய தந்தையால் அடமான கடன் பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அடமானக் கடன் பத்திரம் எழுதப்பட்ட காலகட்டத்தில் புல எண் 231/1 என்பது உட்பிரிவுகள் செய்யப்பட்டு விட்டது என்று சொன்னால் எனக்கு ஞாபகத்தில் இல்லை. எதற்காக மேற்படி 1984 ஆம் வருடம் அடமான கடன் பத்திரம் எழுதப்பட்டது என்று கேட்டால் கிணற்றினை சீரமைத்து சுவர் எழுப்புவதற்காக வாங்கப்பட்டது.

10. பி.சா.ஆ-4 அடமான ஆவணத்தில் புல எண்.231/3 உள்ள கிணற்றில் சுற்றுச்சுவர் அமைப்பதற்கு என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய தந்தை டிசம்பர் மாதம் 2015 ஆம் வருடம் இருந்தார். அவர் இறக்கும் வரை தாதவள்ளி கிராமத்தில் இருந்தார் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தன் தந்தை சென்னையில் உள்ள தன்னுடைய வீட்டிற்கும் வருவார் என்றும் தாதவள்ளி கிராமத்தில் இருப்பார் என்றும் கூறுகின்றார். என்னுடைய தந்தை பெரும்பாலான சமயங்களில் தாதவள்ளி கிராமத்தில் தான் இருப்பார் என்று சொன்னால் ஆமாம். நிலம் அங்கு தானே உள்ளது என்கிறார். என்னுடைய தந்தை இறப்பதற்கு சுமார் 1 1/2 மாதங்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்று சொன்னால் இரண்டு மாதங்களாகவே உடல்நிலை பாதிக்கப்பட்ட தான் இருந்தார். அவருக்கு காலில் கட்டி வந்தது.

11. நான் ரயில்வே துறையில் பணிபுரிந்தேன். அதனால் நான் சென்னைக்கு சென்றேன் என்றால் சரிதான். அதுவரை நான் தாதவள்ளி கிராமத்தில் தான் இருந்தேன்.

நான் சென்னையில் வீடு வாங்கினேன். சென்னையில் உள்ள வீட்டை நானும் என்னுடைய தந்தை மற்றும் என்னுடைய சகோதரர்கள் சேர்ந்து வாங்கினோம் என்று சொன்னால் சரியல்ல. நான் மட்டும் தான் தனியாக வாங்கினேன். 1983 வருடம் வேலைக்கு சேர்ந்தேன். சென்னையில் உள்ள வீடு 1985 ஆம் வருடம் வாங்கினேன். வேலைக்கு சேர்ந்து சிறிது காலத்திலேயே நான் வீட்டை வாங்கி விட்டேன் என்றால் சரிதான். நான் காலியிடமாக வாங்கினேன். 1993 ஆம் வருடம் வீடு கட்டினேன். என்னுடைய சகோதரி கிருஷ்ணவேணி பாகம் கேட்டு அசல் வழக்கு எண் 220/2013 என்ற வழக்கினை தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் எனக்கு அழைப்பானை வந்தது.

12. மேற்படி வழக்கானது எந்த புல எண்ணில் உள்ள சொத்திற்காக என்னுடைய சகோதரியால் தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. எதற்காக என்னுடைய சகோதரி அந்த வழக்கை திரும்ப பெற்றுக் கொண்டார் என்று கேட்டால் அது எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டு சாட்சி தற்போது தன்னுடைய தம்பி தன்னுடைய மகள்களுக்கு எழுதி வைத்துள்ள செட்டில்மெண்டில் உள்ள சொத்து குறித்து அவர்களுக்குள் தகராறு வந்ததாக கூறுகின்றார். சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்ட பின்பு என்னுடைய தம்பி ராஜேந்திரன் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டதா என்று கேட்டால் ஆமாம். என்னுடைய தம்பிக்கு பட்டா எண் 740 இன் கீழ் புல எண்கள் 231/ 1 ஏ மற்றும் 231/1 டி வழங்கப்பட்டது என்று சொன்னால் நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

13. 231/1சி மற்றும் 233/3 எனக்கு பாகமாக கொடுக்கப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் எனக்கு பாகமாக கொடுக்கவில்லை என்னுடைய மகனின் பெயரில் என்னுடைய தந்தை எழுதி வைத்தார். புல எண் 231/1 சி யில் உள்ள சொத்தானது 3 ஏக்கர் 62 செண்ட் விஸ்தீரனத்திற்குள்ளடங்கிய சொத்து என்று சொன்னால் சரிதான். மேற்படி என்னுடைய மகன் பெயருக்கு எழுதி வைத்த சொத்து எங்களுடைய மூதாதையர் சொத்து. அந்த சொத்து குறித்து தான் என்னுடைய தந்தை என்னுடைய மகனுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார்கள். என்னுடைய மகனின் பெயரில் எழுதி வைக்கப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தில் நானோ, என்னுடைய சகோதரிகளோ அல்லது என்னுடைய சகோதரரோ கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் எனக்கு அந்த விவரம் தெரியவில்லை என் தந்தை தான் எழுதி வைத்தார். வீடு அமைந்துள்ள பகுதிக்கான நத்த பட்டா எனக்கும் என்னுடைய தம்பிக்கும் தனித்தனி பட்டாவாக கொடுக்கப்பட்டது.

14. மேற்படி நத்தம் பட்டாவுக்கு கொடுக்கப்பட்ட சொத்தையும் நான் என்னுடைய மகனின் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய தந்தை நத்தம் பட்டாவில் உள்ள இடத்தை என்னுடைய பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி வீடு அமைந்துள்ள பகுதிக்கான பட்டா கூட்டாக எனக்கும் என்னுடைய தம்பியின் பெயரிலும் வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் என்னுடைய தம்பிக்கும் தனி பட்டா வழங்கப்பட்டுள்ளது. நத்தம் பட்டா எண் எனக்கு தெரியாது. வீட்டுமனை பகுதி தனித்தனியாக எங்கள் இருவருக்கும் ஒதுக்கினார்கள் என்று சொன்னால் சரிதான்.

15. மேற்படி வீட்டுமனையை எப்பொழுது ஒதுக்கினார்கள் என்று கேட்டால் எப்பொழுது ஒதுக்கினார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய தந்தை தான் எங்கள் இருவருக்கும் ஒதுக்கினார். அவ்வாறு ஒதுக்கப்பட்ட பின்பு தான் எங்களுக்கு தனித்தனியாக பட்டாவை கொடுத்துள்ளனர் என்று சொன்னால் அந்தப் பகுதியை எப்போது ஒதுக்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்னுடைய தந்தை தான் ஒதுக்கினார். மாடப்பள்ளியில் உள்ள வீடு தொடர்பான நத்தம் பட்டா 1984 ஆம் வருடம் வழங்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. 970 பட்டாவில் உள்ள சொத்தை என்னுடைய மகனுக்கு நான் செட்டில்மென்ட் எழுதிக் கொடுத்துள்ளேனா என்று கேட்டால் ஆமாம், எனக்கு வந்த 4 சொத்தை நான் என்னுடைய மகனுக்கு எழுதிக் கொடுத்துள்ளேன். என்னுடைய மகனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை வாதி தரப்பில் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்துள்ளனர் என்று சொன்னால் சரிதான்.

16. என்னுடைய பத்திரத்தில் பாகம் பிரிக்கப்படாத பொதுவில் உள்ள சம பாகத்தை கொடுப்பதாக சொல்லியுள்ளேன். எனக்கும் ராஜேந்திரனுக்கும் ஒதுக்கப்பட்ட சொத்தில் பாகம் பிரிக்கப்படாத எனக்குரிய சம பாகத்தை கொடுப்பதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மாவட்ட வருவாய் கோட்டாட்சியரிடம் பட்டா தவறாக வழங்கப்பட்டதாக சொல்லி மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் என்னுடைய தந்தை எந்த ஆவணமும் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொல்லி பட்டாவை என்னுடைய தந்தையின் பெயரில் வைத்தார்கள் என்று சொன்னால் சரிதான். வாய்மொழி பாகத்திற்கு பத்திரம் இருக்காது என்று சொன்னால் வாய்மொழி பாகம் என்றால் என்ன என்பது எனக்கு தெரியாது. நான் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வேனா அல்லது தமிழில் கையெழுத்து செய்வேனா என்று கேட்டால் தமிழில் கையெழுத்து செய்வேன். அலுவலகத்தில் மட்டும் நான் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வேன். மேற்படி விசாரணையில்

நான் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வேனா அல்லது தமிழில் கையெழுத்து செய்வேனா என்று சொன்னேனா என்றால் இல்லை.

**17.** தற்போது எனக்கு ஆங்கிலத்தில் கையெழுத்து போட வரவில்லை என்பதெல்லாம் வங்கியில் பணம் எடுக்கும் பொழுது நான் தமிழில் கையெழுத்து செய்ய தொடங்கினேன். மேற்படி மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் விசாரணையில் அலுவலகத்தில் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வேன் என்றும் வங்கியில் பணம் எடுக்கும் சமயத்தில் தமிழில் கையெழுத்து செய்வேன் என்றும் சொன்னேனா என்று கேட்டால் இல்லை. வங்கி பரிவர்த்தனைக்காக மட்டும் தான் தமிழில் கையெழுத்து செய்வேனா என்று கேட்டால் இல்லை, தற்போது அனைத்து கையெழுத்துக்களையும் தமிழில் செய்கின்றேன். எந்த வருடத்திலிருந்து தமிழில் கையெழுத்து செய்ய தொடங்கினேனா என்று கேட்டால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி விசாரணையில் என்னுடைய தம்பி எங்களுடைய சம்மதம் இல்லாமல் எங்களுடைய கையெழுத்தை தமிழில் செய்து கொடுத்தார் என்று சொன்னேனா என்று கேட்டால் இல்லை.

**18.** என்னுடைய வீட்டில் வேறு யாரெல்லாம் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வார்கள் என்று கேட்டால் நான் கையெழுத்து செய்வது தான் எனக்கு தெரியும், மற்றவர்கள் கையெழுத்து செய்யும் விவரம் எனக்கு தெரியாது. கிருஷ்ணவேணி கையெழுத்து செய்வாரா அல்லது கைநாட்டு வைப்பாரா என்று கேட்டால் அவருக்கு கையெழுத்து செய்ய தெரியாது கைநாட்டு தான் வைப்பார். வா.சா.ஆ–3 பக்கம் 9–ல் உள்ளவற்றை சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு படித்துப் பார்க்க சொல்லப்பட்டது. மேற்படி அறிக்கையில் ராஜேந்திரன் ஆவணம் தயார் செய்ததாக சொல்லப்பட்டுள்ளது. அந்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்று கேட்டால் அதைப் பற்றிய விவரம் எனக்கு எதுவுமே தெரியாது. ராஜேந்திரனால்

தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் ஆவணம் பற்றிய விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது.

19. 13.06.2013 ஆம் தேதி என்னுடைய மகனுக்கு ஆவணம் எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. ஆவணத்தை சாட்சியிடம் காண்பித்துக் கேட்டதற்கு 13.06.2013 பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டதாக கூறுகின்றார். இப்படி ஆவணத்தில் நான் எந்த மொழியில் கையெழுத்து செய்துள்ளேன் என்று கேட்டால் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளேன். 13.06.2013 செட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ–21. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களையும் என்னுடைய பெயரில் உள்ள சொத்துக்களையும் என்னுடைய மகனுக்கு நான் கொடுத்து விட்டேன் என்று சொன்னால் நான் வாங்கிய சொத்துக்களை மட்டும் தான் என்னுடைய மகனுக்கு கொடுத்துள்ளேன். ராஜேந்திரன் பெயரில் உள்ள பட்டா ரத்து செய்யப்படுவதற்கு முன்பு வரை என்னுடைய தந்தையால் வரி செலுத்தப்பட்டதாக சொல்லி அந்த ரசீதுகளை பி.சா.ஆ–7 ஆக குறியீடு செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதில் பட்டா எண் 740 என சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் பட்டா விவரமல்லாம் எனக்கு தெரியாது, என்னுடைய தந்தை இந்த ஆவணத்தை என்னிடம் கொடுத்து விட்டு சென்றார்.

20. என்னுடைய தந்தை தான் வழக்கு தாக்கல் செய்தார் என்கிறார் சாட்சி தானாக முன்வந்து. என்ன வழக்கு என்று கேட்டதற்கு மோசடியாக பட்டா பெற்றதற்கு என்று கூறுகின்றார். அவர் இறந்த பின்பு நான் அதனை தொடர்ந்து நடத்தினேன் என் தந்தை எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் என் தந்தை தான் வழக்கை தாக்கல் செய்தார். பி.சா.ஆ–7ல் உள்ள வரி ரசீதுகள் அனைத்தும் என்னுடைய பெயரில்

உள்ள கூட்டு பட்டாவில் உள்ள சொத்திற்காகவும் ராஜேந்திரன் பெயரில் உள்ள பட்டாவில் உள்ள சொத்திற்காகவும் செலுத்தப்பட்ட ரசீதுகள் என்று சொன்னால் அப்படிதான் இருக்கும், அந்த விவரம் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்பு நான் ஜெயந்தி மற்றும் ஜெயலட்சுமி பெயரில் உள்ள பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று மாவட்ட பதிவாளர் அவர்களிடம் மனு கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். மாவட்ட பதிவாளர் கொடுத்த உத்தரவில் வாய்மொழி பாகப்பிரிவினை தொடர்பாக வருவதால் நீதிமன்றத்தை அணுக வேண்டும் என்று சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சாட்சி ஆவணத்தை கேட்டு படித்துப் பார்த்துவிட்டு தன்னுடைய உத்தரவின் பெயரில் ஆட்சேபனை இருந்தால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளதாக கூறுகின்றார். அதன் அடிப்படையில் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

21. நான் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் கொடுத்த உத்தரவின் அடிப்படையில் மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த மனுவின் அடிப்படையில் தான் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் சரிதான். மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் ராஜேந்திரன் பெயரில் இருந்த பட்டாவை மாற்றம் செய்து ரங்கநாதனின் பெயரில் வைக்க உத்தரவு பிறப்பித்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி உத்தரவில் கூட்டு பட்டா குறித்தோ அல்லது என்னுடைய மகனின் பெயரில் உள்ள பட்டா குறித்தோ ரத்து செய்து ரங்கநாதன் பெயரில் மாற்றவில்லை. மாவட்ட பதிவாளர் அவர்களிடம் மேற்படி ராஜேந்திரனால் எழுதிக் கொடுக்கப்பட்ட பத்திரத்தின் மீது மேற்கொண்டு எந்த ஆவணங்களும் பதிவு செய்யக்கூடாது என கேட்டு தான் மனு கொடுக்கப்பட்டது. மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவு ஜெயந்தி மற்றும் ஜெயலட்சுமி ஆகிய இருவராலும் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்

110/2022 மற்றும் 112/2022 என்ற வழக்கின் விவரத்தை குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் இருக்கலாம்.

22. மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவில் திருப்பத்தூர் சார் பதிவாளர் அலுவலக ஆவணங்கள் 9912/2013 மற்றும் 9913/2013 ஆகிய ஆவணங்கள் மெய்த் தன்மையான பட்டாவின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் மேற்படியான ஆவணங்கள் மோசடியான ஆவணங்கள் என முடிவுக்கு வர இயலாது என குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். அவர் தன்னுடைய உத்தரவின்பேரில் பட்டா ரத்து செய்யப்பட்டு விட்டதால் அது குறித்து மேற்கொண்டு எந்த ஆவணங்களும் பதிவு செய்யக்கூடாது என நிறுத்தி வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி மாவட்ட பதிவாளர் அவர்கள் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பே ஜெயந்தி மற்றும் ஜெயலட்சுமி இருவரும் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்று சொன்னால் சரிதான். மேற்படி உத்தரவு வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

23. கிருஷ்ணவேணி தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கில் நானும் ஒரு தரப்பினர். மேற்படி வழக்கில் நான் ஆஜராகவில்லை. சாட்சி மீண்டும் தனக்கு ஞாபகம் இல்லை என்கின்றார். கிருஷ்ணவேணி தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கில் நான் தனிப்பட்ட முறையில் தரப்பினராகவே ஆஜர் ஆனேன் என்றும் தற்போது வழக்கிற்காக ஞாபகம் இல்லை என்றும் கூறுகின்றேன் என்று சொன்னால் இந்த வழக்கிற்கும் அதற்கும் தொடர்பு இல்லை, அதனால் ஞாபகம் இல்லை என்றேன். கிருஷ்ணவேணி தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கானது என்னுடைய தந்தையின் பூர்வீக சொத்து குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரிதான். கிருஷ்ண வேணி தன்னுடைய தந்தையின் பூர்வீக

சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்வதாக சொல்லி தான் வழக்கினை தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான்.

24. மேற்படி கிருஷ்ணவேணி தாக்கல் செய்த வழக்கானது எனக்கு ஒதுக்கப்பட்ட பாகத்துடன் தொடர்புடைய சொத்து குறித்து என்பதால் தான் நான் கிருஷ்ணவேணிக்கு ரூபாய் ஒரு லட்சம் கொடுத்து பைசல் செய்து வழக்கினை திரும்ப பெற்றுக் கொள்ள செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் கிருஷ்ணவேணியும் மேற்படி சமரசம் குறித்து ஒரு சமரச உடன்படிக்கை ஏற்படுத்தினோமா என்று கேட்டால் ஞாபகம் இல்லை. 09.02.2015 ஆம் தேதி நானும் என்னுடைய சகோதரி கிருஷ்ணவேணியும் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் ஞாபகம் இல்லை, என்னிடம் ஆவணத்தை காண்பித்தால் ஞாபகம் வரும். சாட்சியிடம் பதிவு செய்யப்படாத 01.09.2015 ஆம் தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரத்தை காண்பித்து கேட்டதற்கு சாட்சி அதில் உள்ள கையெழுத்து தன்னுடைய கையெழுத்து தான் என கூறுகின்றார். இந்த ஆவணம் நானும் என்னுடைய சகோதரியும் ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் தான் என்கின்றார். மேற்படி பத்திரத்தின் ஒளிநகல் வா.சா.ஆ22

25. அதில் சாட்சி வீரபத்திரனும் கையெழுத்து செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள பணத்தை பெற்றுக் கொண்டுதான் கிருஷ்ணவேணியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திரும்ப பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்னால் அந்த பத்திரத்தில் அவ்வாறுதான் எழுதப்பட்டுள்ளது. செட்டில்மென்ட் பணத்தை ரங்கநாதனும் ராஜேந்திரனும் கொடுக்கவில்லை என்று சொன்னால் அந்த பத்திரத்தில் நான் கொடுத்ததாக தான் சொல்லியுள்ளது. ஆனால் எனக்கு அந்த விவரங்கள் ஞாபகம் இல்லை ஆவணத்தை பார்த்தவுடன் என்னுடைய கையெழுத்து எனக்கு ஞாபகம்

வந்துவிட்டது. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் நானும் கிருஷ்ணவேணியும் எழுதிக்கொண்ட காலகட்டத்திலே ராஜேந்திரன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான்.

**26.** அதன் பிறகு நானும் என்னுடைய சகோதரிகளும் பாகப்பிரிவினை கேட்டு எந்த வழக்கினையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் நான் என்னுடைய பாகத்தை கேட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அதனை தான் நான் கேட்கின்றேன். நான் தனிப்பட்ட முறையில் பரிகாரம் கேட்டு இந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும் அதேபோன்று தனியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். லிங்கம்மாள் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் விசாரணையில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சொல்லியிருப்பார். அந்த விவரத்தை மறுத்து நான் பதிலுரையில் சொல்லவில்லை என்று சொன்னால் எனக்கு இந்த விவரம் புரியவில்லை என்கின்றார்.

**27.** மேற்படி கேள்வி மீண்டும் சாட்சியிடம் எடுத்துரைக்கப்பட்ட போது நான் வாய்மொழி பாகமே ஆகவில்லை என்று தான் சொல்கின்றேன், அவர் சொன்னது தவறு என்று நான் சொல்ல வரவில்லை என்கிறார் சாட்சி. என்னுடைய தந்தையின் ஈம சடங்குகளை யார் செய்தார்கள் என்று கேட்டால் நான் தான் செய்தேன். சாட்சி மீண்டும் என்னுடைய மகன்தான் செய்தார் என்றும் என்னிடம் காசு இல்லை என்று கூறுகின்றார். ஈம சடங்கினை ராஜேந்திரன் தான் செய்தார் என்றும் நான் வழக்கத்திற்காக பொய்யாக சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தைக்கு கொல்லி வைத்தது ராஜேந்திரன் தான். தந்தைக்கு இளைய மகன் தான் கொல்லி வைக்க வேண்டும் அதை நாங்கள்

மாற்றவில்லை. ஈம சடங்குகளின் செலவுகளை ராஜேந்திரன் தான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகன் என்னுடைய தந்தையின் மருத்துவ செலவுகளை பார்க்கவில்லை என்றும் பராமரிப்பு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

28. என்னுடைய மகனின் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள வாசகங்களுக்காக என்னுடைய மகன் மருத்துவ செலவுகளை செய்ததாகவும், பராமரித்து வந்ததாகவும் ஈம சடங்குகளை செய்ததாகவும் பொய்யாக சாட்சியமளிகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பூர்வீக சொத்து குறித்து தனிப்பட்ட வகையில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைக்க என் தந்தைக்கு உரிமை இல்லை என்றும் ஆனால் எனக்கு வாய்மொழியாக ஒதுக்கப்பட்ட பாகம் குறித்து சொத்துக்கான பத்திரத்தை என்னுடைய மகனின் பெயரில் எழுதி வைக்க வேண்டும் என நான் கேட்டுக் கொண்டதால் என்னுடைய தந்தை என்னுடைய மகனின் பெயருக்கு எனக்கு ஒதுக்கப்பட்ட பாக சொத்திற்காக தான் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சகோதரர் இறந்த பின்பு சுமார் 40 வருடத்திற்கு முன்பே எங்கள் குடும்பத்திற்குள் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல. வாய்மொழி பாகம் என்றாலே என்னவென்பது எனக்கு தெரியாது.

29. வாய்மொழி பாகத்தின் அடிப்படையிலும் அனுபவத்தின் அடிப்படையிலும் தான் ராஜேந்திரனுக்கு புல எண் 231/1 எ மற்றும் 231/1 டி இல் உள்ள 2 ஏக்கர் 31 சென்ட் இடத்திற்கான பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மீதமுள்ள 1 ஏக்கர் 31 சென்ட் இடம் என்னுடைய தந்தையின் பெயர் உள்ள 10 செண்டு சேர்த்து 1 ஏக்கர் 41 சென்ட்டுக்கான பாகம் எனக்கு ஒதுக்கப் பட்டது என்று

சொன்னால் எங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை. எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்திற்க்கான புல எண் 231/1 சி மற்றும் 231/3 என்று சொன்னால்; அது என்னுடைய சொத்து இல்லை. அதன்படி தான் என்னுடைய தந்தை ரங்கநாதன் என்னுடைய மகன் சசிகுமாருக்கு வா.சா.ஆ–16 28–10–2015 ஆம் தேதியில் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மாடப்பள்ளியில் உள்ள வீட்டுமனை தொடர்பாக எனக்கு ஒதுக்கப்பட்ட பாகத்திற்கு ஒரு பத்திரம் வேண்டும் என்பதற்காக தான் என்னுடைய தந்தை என்னுடைய பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

30. எங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்ட சமயத்தில் தான் வீட்டுமனையையும் பாகமாக பிரித்துக் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல, எங்களுக்கு பாகம் ஏற்படவில்லை. எங்களுக்குள் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றும் அவ்வாறு வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்ட பொழுது ராஜேந்திரனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து தற்பொழுது சாலை ஒட்டி அமைந்துள்ளதாலும் அவருக்கு 2 ஏக்கர் 31 சென்ட் வழங்கப்பட்டுள்ளதாலும் அதில் பொறாமை கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாகமாக 1 ஏக்கர் 41 சென்ட் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் ஆனால் நான் அந்த சமயத்தில் சென்னையில் இருந்ததால் அந்த சொத்துக்கான பட்டா என்னுடைய தந்தை ரங்கநாதன் பெயரில் இருந்தது என்றும் அதற்காக தான் அந்த சொத்து குறித்து என்னுடைய தந்தையால் என்னுடைய மகனின் பெயருக்கு நான் செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரங்களை அடிப்படையாகக் கொண்டுதான் நான் மாவட்ட வருவாய் கோட்டாட்சியரிடம் தவறுதலாக மனு கொடுத்து பட்டவை ரத்து செய்து விட்டேன் என்று சொன்னால் எங்களுக்கு உரிமையாக வர வேண்டிய சொத்தை தான் நாங்கள் கேட்கின்றோம்.

31. 987 இல் பட்டா எதன் அடிப்படையில் கூட்டாக வழங்கப்பட்டது என்று கேட்டால் பட்டா வழங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. ஆனால் மேற்படி பட்டாவில் உள்ள சொத்து குறித்து நான் என்னுடைய மகனுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்று கேட்டால் நான் ஆவணங்களை தேடிய போது எனக்கு தெரிய வந்தது. ராஜேந்திரன் தனக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தின் மீதுதான் ஜெயந்தி மற்றும் ஜெயலட்சுமி பெயரில் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றும் அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றும் அதனால் வாதி மற்றும் ஜெயலட்சுமியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அனுமதிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, திருத்தம் செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பித்து, அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

A SARIDHA Digitally signed by A SARIDHA

சார்பு நீதிபதி
சார்பு நீதிமன்றம், திருப்பத்தூர்